**பத்திரிக்கை செய்தி**

திருவள்ளூர் மாவட்டம் முகப்பேரை சேர்ந்த திரு.ராமக்கிருஷ்ணன், த/பெ.அங்கையன் என்பவர் தனது மனைவி திருமதி.R.லதா அவர்களின் பெயரில் S.K.Grand City வீட்டு மனைப்பிரிவு அமைத்துள்ளதாகவும், இந்த வீட்டு மனை பிரிவுகளுக்கு தெரு விளக்கு மின் கம்பங்கள் நட்டு மின் இணைப்பு பெற 26.09.2024-ந் தேதி தெருவிளக்கு அமைக்க இணையவழியில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், நிர்வாக பொறியாளர், டவுன் பஞ்சாயத் சேத்பட், என்பவருக்கு விண்ணப்பம் பதிவு செய்ததாகவும், இந்த பணியை செய்த Foreman திரு .சிவப்பிரகாசம் என்பவர் 07.01.2025 ஆம் தேதி நேரில் தொடர்பு கொண்டு லஞ்ச பணமாக ரூபாய். 6,000/- தர வேண்டும், இல்லை எனில் மீதமுள்ள பணியை செய்யாமல் உங்களை அலைக்கழித்து விடுவேன் என்று கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத புகார்தாரர் ராமக்கிருஷ்ணன் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் 13.01.2025 அன்று புகார் அளித்ததின் பேரில், காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.வேல்முருகன் அவர்களால் வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறி வைப்பு நடவடிக்கையின் படி சேத்பட் டவுன் EB அலுவலக Foreman திரு .சிவப்பிரகாசம் அவர்கள் லஞ்சப்பணம் ரூ.6,000/- புகார்தார்ரிடம் பெற்ற போது கையும் களவுமாக பிடிபட்டுள்ளார்.